இன்று உழைப்பாளர் தினம்...

எவ்வளவோ நவீன காலமாக மாறிவிட்ட போதிலும், தங்கள் கற்ற தொழிலை கைவிடாமல் கல்லை செதுக்கி சிற்பங்கள் செய்யும் நமணசமுத்திரம் பகுதி தொழிலாளர்கள். அடுத்தபடம்: சந்தைப்பேட்டை பகுதியில் கொல்லுப் பட்டறையில் இரும்பை கொண்டு விவசாயிகளுக்கு தேவையான பொருட்களை செய்யும் தொழிலாளர்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்

களைகட்டும் சித்திரை திருவிழா கிடாவெட்டு

மளிகை பொருட்களின் விற்பனை அதிகரிப்பு

புதுக்கோட்டை, மே1: சித்திரை மாதம் தொடக்கத்தில்இருந்துபுதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மாரியம்மன் உள்ளிட்ட பல கோவில்களில் நடந்துவரும் திருவிழாக்களில் கிடா வெட்டு நடப்பதால் மளிகை பொருட்களின் விலை வழக்கத்தை விட அதிக அளவில் விற்பனை நடைபெற்றதாக மளிகை கடை வியபாரிகள் தெரிவித்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 450க்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகள் உள்ளது. இந்த பஞ்சாயத்துகளில் ஆயிரக்கணக்கான குக்கிராமங்கள் உள்ளது. இந்த கிராமங்களில் உள்ளவர்களுக்கு கோயில் ஊரிலோ அல்லது பக்கத்து ஊரிலோ இருக்கும். குறிப்பாக மாரியம்மன், முத்துமாரியம்மன் என உள்ளிட்ட பல்வேறு கோவில் உள்ளது, இந்த கோவில்களில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதங்களில் காப்புகட்டுதலுடன் தொடங்கி தேர் திருவிழா நடக்கும். அப்போது கிடா. வெட்டுதலும் நடக்கும். கோவில்களுக்கு மக்கள் வேண்டுதல் வைத்து வெள்ளாடு, செம்மரி கிடாய்கள் வளர்ப்பார்கள். ஒவ்வொரு திருவிழாவின்போதும் முக்கியஸ்தர்கள் சாமியிடம் உத்தரவு பெற்று நாள் குறித்து கிடா வெட்டுவார்கள். கோவிலில் வெட்டப்படும் கிடாய்களை அங்கேயே சமைத்து சாமி சாப்பிடுவார்கள். வெட்டப்படும் கிடாய்களை வீட்டில் சமைத்து உறவினர்களுக்கு அழைப்பு விடுத்து அவர்களுக்கு பரிமாரி மகிழ்வார்கள்.

இப்படி மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் நடைபெறும்.

இந்நிலையில் இந்த ஆண்டு கிராமத்தில் உள்ள "ஆர்வமாக கிடாவெட்டு நிகழ்வை நடத்த ஆயத்தமாகி நடத்தத்தொடங்கினர். சாமியிடம் உத்தரவு பெற்றவுடன் மளிகை சாமன்கள் வாங்க சயல்காரிடம் விபரம் பெற்று அந்தெந்த கிராமங்கின் அருகில் உள்ள நகர் பகுதிக்கு சென்று வாங்கி வருவர். ஒரு வீட்டில் கிடா வெட்டு என்றால் கட்டாயம் ரூ.10 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரம் வரை மளிகை பொருட்கள் வாங்கிவிடுவார்கள். இந்த வியபாரம் சித்திரை மாதம் முழுவதும் தினசரி ஏதாவது ஒரு கிராமத்தினர் ஒரு மளிகை கடைக்கு வந்த வாங்கி செல்வர். இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளை விட இந்த ஆண்டு மளிகை பொருட்களின் விற்பனை வழக்கத்தைவிட அதிக அளவில் இருந்தது என்றனர்.

இது குறித்து மளிகை கடை வியபாரிகள் கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர் திருவிழா தொடர்ந்து நடப்பதால் கிடாவெட்டும் அதிகரித்து வருகிறது. முன்பெல்லாம் ஒரு வீட்டிற்கு ஒரு கிடாய் வெட்டுவார்கள். தற்போது அதிக அளவில் கிடாய் வெட்டுகிறார்கள். இந்த ஆண்டு எந்த தடையும் இல்லாததால் கிராமகங்கள் தோறும் தேர் திருவிழா நடந்து வருகிறது. இதனால் ஒவ்வொரு வீடுகளிலும் ஒன்று முதல் 3 கிடாய் வரை வெட்டி சமைத்து பக்கதர்களுக்கு, உளவினர்களுக்கு பரிமாருகின்றனர். இதனை சமைக்கு தேவையான அரிசி, மளிகை பொருட்கள்வாங்க தினசரி மளிகை கடைக்கு வந்த வண்ணம் இருந்தனர். இதனால் எங்களுக்கு வழக்கத்தை விட விற்பனை அதிகரித்து. இதனால் லாலமும் அதிகரித்து மகிழ்ச்சி ஏற்பட்டது என்றனர்.

கந்தர்வகோட்டை அருகே

குளத்தில் மூழ்கி பள்ளி மாணவன் பலி

போலீசார் விசாரணை

கந்தர்வகோட்டை, மே1: கந்தர்வகோட்டை அருகே குளத்தில் மூழ்கி பள்ளி மாணவன் பரிதாபமாக உயிரிழந்தார். புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், கல்லாகோட்டை கிராமத்தைச் சேர்ந்த கலைச்செல்வன் மகன் ஸ்ரீ முத்து(17). இவர் கல்லாகோட்டையில் உள்ள அரசுப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படித்து வருகிறார். கோடை விடுமுறைக்காக அருகில் உள்ள சொக்கம்பேட்டை கிராமத்தில் உள்ள தனது அத்தை வீட்டிற்கு சென்றுள்ளார். இந்நிலையில் வியாழக்கிழமை சொக்கம்பேட்டையில் உள்ள குளத்தில் குளிக்க சென்றார். அப்போது ஸ்ரீ முத்து குளத்தின் ஆழமான பகுதிக்கு சென்று நீரில் மூழ்கி கூச்சலிட்டுள்ளார். அருகில் இருந்தவர்கள் குளத்தில் இறங்கி ஸ்ரீ முத்துவை மீட்டு கந்தர்வகோட்டை அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவரை பரிசோதித்த மருத்துவர் ஸ்ரீ முத்து இறந்து விட்டதாக தெரிவித்தார். இது குறித்து கந்தர்வகோட்டை போலீசார் வழக்குப்பதிந்து உடலை கைப்பற்றி உடற்கூராய்விற்கு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருமயம், அரிமளம் பகுதியில் தொடர் வறட்சி

புற்கள், செடிகள் கருகியதால் கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு

அரசு நடவடிக்கை எடுக்க விவசாயிகள் வேண்டுகோள்

திருமயம், மே1: திருமயம், அரிமளம் பகுதியில் தொடர் வறட்சி காரணமாக மேய்ச்சல் நிலங்களில் புற்கள், புதர் செடிகள் கருகியது. கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், அரிமளம் பகுதியில் உள்ள கிராமங்களில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. விவசாயத்தில் வரும் எச்சங்கள் அதாவது வைக்கோல், தவிடு ஆகியவற்றை வீனாகமல் பயன்படுத்த விவசாயிகள் கால்நடைகள் வளர்பில் ஆர்வம் காட்டி வந்தனர். இதனால் விவசாயத்தில் லாபம் கிடைப்பதுடன் விவசாயம் மூலம் வீனாகும் பொருட்களை கால்நடைகளுக்கு கொடுத்து கால்நடைகளிடம்இருந்துபால், இறைச்சி உள்ளிட்டவைகளை விற்பனை செய்து விவசாயிகள் கனிசமான லாபம் அடைந்தனர். மேலும் கால்நடைகள் மூலம் கிடைக்கும் சானத்தை கொண்டு இயற்கை உரம் தயாரித்து விவசாயத்திற்கு பயன்படுத்தினர். எனவே கால்நடைகள், விவசாயம் ,இவை இரண்டும் விவசாயிகளின் வாழ்க்கையில் ஒரு வாழ்க்கை சக்கரம் போல் செயல்பட்டது. இந்நிலையில் கடந்த சில வருடங்களாக பருவ நிலை மாற்றத்தால் திருமயம், அரிமளம் பகுதிகளில் மழை சரிவர பெய்யவில்லை. இதனிடையே கடந்தாண்டு பருவமழை விவசாயிகள் எதிர்பார்த்ததை விட மிக மிக குறைவான அளவே பெய்துள்ளது. இதனால் விவசாயத்திற்கு போதுமான நீர் இல்லாமல் விவசாயிகள் விவசாயம் செய்யும் பரப்பளவு வெகுவாக குறைந்துள்ளது. எனவே பெரும்பாலான விவசாய நிலங்கள் சீமை கருவேல மரங்கள் மண்டி காடு போல் காட்சியளிக்கிறது. இந்நிலையில் விவசாயம் மூலம் கிடைக்கும் உபரி பொருட்களான வைக்கோல், தவிடு தட்டுபாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இதனால் விவசாயிகள் கால்நடைகளை காப்பாற்ற கடையில் தீவன வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தீவன விலை ஏற்றம் விவசாயிகளுக்கு கட்டுபடி ஆகாததால் கால்நடைகளை விற்கும் நிலைக்கு தள்ளபட்டனர். 30 வருடங்களுக்கு முன்னர் திருமயம், அரிமளம் பகுதியில் உள்ள ஒவ்வொரு விவசாயி வீடுகளிலும் 10க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருந்த நிலையில் தற்போது ஒரு வீட்டில் ஒரு கால்நடை இருப்பதே அபூர்வமாக உள்ளது. தற்போது விவசாயிகள் பெரும்பாலும் பாலுக்காக மட்டுமே கால்நடை வளர்க்கின்றனர். அதுவும் கலப்பின பசு மாடுகள் மட்டுமே வளர்க்கபடுகிறது. அதேசமயம் விவசாயத்திலும் பூச்சி கொல்லி மருந்துகள், உரம் ஆக்கிரமிப்பால் விவசாயிகளுக்கு மாடுகள் மூலம் கிடைக்கும் இயற்கை உரமான சானம் தேவையில்லாமல் போனது. இந்நிலையில் திருமயம், அரிமளம் பகுதியில் தற்போது கடந்த சில ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பருவ மழை பொய்த்து கடும் வறட்சி நிலவுகிறது.

இதனால் வயல், காட்டுபகுதியில் உள்ள புற்கள், புதர்செடிகள் கருகிய நிலையில் பாலைவனம் போல் உள்ளது. விவசாயமின்றி வீடுகளில் கால்நடைக்கு தேவையாக தீவனம் இல்லாத நிலையில் மேய்ச்சல் நிலங்களும் கருகிவிட்டதால் கால்நடைகள் தீவன தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி உள்ளனர். இனதால் எஞ்சி இருக்கும் கால்நடைகளையும் விவசாயிகள் அடிமாட்டு விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரிமளம், திருமயம் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு கிராமமாக சென்று வீடுகளில் உள்ள கால்நடைகளை கணக்கெடுத்து அதற்கு தேவையான தீவன வழங்க அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைஎடுக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகளிடையே எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

திருமயம் பகுதியில் மழையின்றி கடும் வறட்சி நிலவுவதால் பசுமையாக இருந்த புல் வெளிகள் காய்ந்து பாலைவனம் போல் காட்சியளிக்கிறது.

உலக புத்தக தினவிழாவை முன்னிட்டு

திருமயம் கிளை நூலகத்தில் ஓவிய போட்டி

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு

திருமயம் தீரர் சத்தியமூர்த்தி கிளை நூலகத்தில் உலக புத்தக தின விழாவை முன்னிட்டு நடைபெற்ற ஓவிய போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள்.

திருமயம்.மே 1: திருமயம் கிளை நூலகத்தில் உலக புத்தக தினவிழாவை முன்னிட்டு ஓவிய போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தீரர் சத்தியமூர்த்தி நினைவு கிளை நூலகத்தில் உலக புத்தகதினவிழா தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை பொது நூலக இயக்கம் மற்றும் திருமயம் கிளை நூலக வாசகர் வட்டம் இணைந்து கடந்த 24ம் தேதி முதல் 30ம் தேதி வரை ஓவிய போட்டி நடைபெற்றது. இந்நிலையில் நேற்று நடைபெற்ற புத்தக தின விழா இறுதி நிகழ்ச்சியில் கீரனூரைச் சேர்ந்த ஓவிய ஆசிரியை பாப்பா கலந்து கொண்டு சித்திரமும் கைப் பழக்கம் என்ற தலைப்பில் மாணவர்களுக்கு ஓவியத்தை கற்பித்தார். விழாவில் சிறப்பு விருந்தினராக வருவாய் ஆய்வாளர் செந்தில்குமார் கலந்து கொண்டார். போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு ஆடிட்டர் ரவீந்திரன் குருவம்மாள் குடும்பத்தினர் பரிசு பொருள்கள் வழங்கினர். விழாவில் திருமயம் தமிழ் மன்ற தலைவர் சுப்பிரமணியன், யோகா அறக்கட்டளை தலைவர் சிவகாமி சுப்பிரமணியன், ஓய்வூதியர் சங்க மாவட்ட துணை தலைவர் பழனியப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை நூலகர்கள் மாலதி, பழனி முருகன், உதவியாளர் மகாலட்சுமி, வாசகர் வட்ட தலைவர் பிரபாகர் ஆகியோர் செய்திருந்தனர். நிகழ்ச்சியில் கண்ணுச்சாமி புரவலராக இணைந்ததோடு திருமயம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட மாணவிகள் உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டனர்.

வெப்ப அலை வீசும்

கோடை காலத்தில் கண்களை பராமரிக்கும் முறை

மருத்துவர்கள் அறிவுரை

புதுக்கோட்டை, மே1: கோடை காலத்தில் கண்களை பராமரிக்கும் முறை குறித்து கண் டாக்டர்கள் அறிவுரை வழங்கி உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. பகலில் வீசும் வெப்ப அலை காரணமாக பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். அதீத வெப்பத்தின் காரணமாக கண்களை முறையாக பராமரிக்க வேண்டிய சூழ்நிலை உண்டாகி உள்ளது. வெயில் கடுமையாக இருக்கும் நேரங்களில் நேரடியாக சூரியஒளி கண்களில் படும் போது பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகிறது.

இதிலிருந்து தப்பிக்கும் முறை கண் மருத்துவர்கள் கூறியதாவது:- கண்கள் ஈரப்பதமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். தண்ணீரை அதிகம் குடிப்பதன் மூலம் உடல் மற்றும் கண்கள் ஈரப்பதத்துடன் இருக்க முடியும். ஆல்க ஹால் மற்றும் குளிர்பானங்கள் குடிப்பதால் உடலில்பக்க விளைவுகள் ஏற்படும். கம்ப்யூட்டர், செல்போன் போன்ற எலக்ட்ரானிக்ஸ் சாதனங்களை அதிகம் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். கோடைகால பழங்களான தர்பூசணி, வெள்ளரி, நுங்கு போன்றவற்றை அதிகம் சேர்த்து கொள்ள வேண்டும். அதிக வெப்பம் காரணமாக கண்களில் எரிச்சல் மற்றும் வறட்சி தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது. அப்போது சுய வைத்தியம் செய்யாமல் கண் மருத்துவரை அணுக வேண்டும். கண்கள் பாதுகாப்பாக இருக்க குளிர் கண்ணாடி அணியலாம். அடிக்கடி குளிர்ந்த நீரால் கண்கள் மற்றும் முகத்தை கழுவ வேண்டும். கோடை காலங்களில் காற்று மாசுபாட்டின் காரணமாக கண் கட்டி வரலாம். அப்போது நாமகட்டி, ஐஸ், வெந்நீர் ஒத்தடம் வைப்பது போன்றவை செய்யக்கூடாது. முறையாக சிகிச்சை பெற்று கொள்ள வேண்டும். இவ்வாறு கூறினர்.

இலுப்பூர் புறவழிச் சாலையில் உயர்மின் கோபுரவிளக்கு அமைக்க வேண்டும்

வாகன ஓட்டிகள் கோரிக்கை

இலுப்பூர், மே1: இலுப்பூர் புறவழிச்சாலையில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலுப்பூர் தாலுகா தலைமையிடமாக கொண்ட பேரூராட்சி அமைந்துள்ளது. இங்கு கோட்டாச்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், தாலுகா அலுவலகம், பேரூராட்சி அலுவலகம், அரசு மருத்துவமனை, காவல் நிலையம்,

தீயணைப்பு நிலையம் போன்ற அனைத்து அலுவலங்களும் உள்ளது. இலுப்பூர் புதுக்கோட்டை - மணப்பாறை பிரதான சாலையில் உள்ளது. இலுப்பூர் நகர கடைவீதிக்குள் சாலைகள் சில இடங்களில் கூறுகளாக இருந்ததால் அடிக்கடி போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது.

சில நாட்களுக்கு முன்பு இலுப்பூர் புறவழிச்சாலை அமைக்கப்பட்டது. இலுப்பூர் புறவழிச்சாலை தொடங்கும் இடம் மற்றும் மூடியும் இடங்களில் மூன்று சாலை சந்திக்கும் இடமாகவும், நடுவில் இரண்டு இடங்களில் ஆலத்தூர் செல்லும் சாலை மற்றும் திருநாடு செல்லும் சாலை ஆகிய சாலைகள் நான்கு சாலைகள் சந்திக்கும் இடமாக உள்ளது. இந்த மூன்று சாலைகள் மற்றும் நான்கு சாலைகள் சந்திக்கும் இடங்களில் மின் வெளிச்சம் இல்லாத பகுதியாக உள்ளது. ஆகவே இச்சாலையை கடக்கும் இரு சக்கர வாகன ஓட்டிகள் இரவு நேரத்தில் மிகவும் கவனமாக வானத்தை இயக்க வேண்டி உள்ளது. சைக்கிள் மற்றும் நடந்து செல்பவர்களுக்கு பாதுகாப்பு இல்லநிலை உள்ளது. இப்பகுதியில் சிறு சிறு விபத்துக்களும் ஏற்படுகிறது. ஆகவே இலுப்பூர் புறவழிச்சாலை பகுதியில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க வேண்டும் என்பதே வாகன ஓட்டிகளின் கோரிக்கையாக உள்ளது.

இலுப்பூர் புறவழிச்சாலையில் உயர்மின் விளக்கு கோபுரம் அமைக்க வேண்டும்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017(தநா)

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை **எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ,** அதே அடிப்படையில் **03.06.2026 தேதியன்று** மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
2.	கடன் எண். LAP05972000000046851 விஜயகுமார் J (கடன்தாரர்) விஜயலட்சுமி M (உப கடன்தாரர்) ராம்குமார் ஜெயசந்திரன்	அறிவிப்பு தேதி: 08.08.2025 மொத்த நிலுவைத் தொகை: 08.08.2025 தேதியின்படி ரூ. 14,33,804/- (ரூபாய் பதினான்கு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று நான்கு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு @15.35 வட்டியுடன் கூடிய தொகை.	கையக	இனம் எண்.1: புதுக்கோட்டை மாவட்டம் & பதிவு மாவட்டம், புதுக்கோட்டை துணை பதிவு அலுவலகம், R.S.No.418/2 உள்ள நிலம் வீட்டுமனைகளாக S.S.L/Ews லேஅவுட் அனுமதி எண்.796/90 இன் ரெங்கம்மாள் சத்திரம் ஸ்கீம் என்ற திட்டத்தின்படி பிரிக்கப்பட்டுள்ளது. அதில் 450 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.27 பின்வரும் நான்கெல்லைகளைக் கொண்டது. வடக்கு: மனை எண்.28, தெற்கு: மனை எண்.26, கிழக்கு: 9 மீட்டர்கள் சாலை, மேற்கு: திட்ட எல்லை. இந்த நான்கெல்லைகளுக்குள் அளவீடு: வடக்கு: 15 அடி, கிழக்கு: 30 அடி, தெற்கு:15 அடி, மேற்கு: 30 அடி. மொத்தம் 450 ச.அடி சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதில் மின்வாரிய சேவை இணைப்பு மற்றும் அதன் வைப்புத் தொகை, நடைபாதை மற்றும் பயன்பாட்டு உரிமைகள் உடையது. **இனம் எண்.2:** புதுக்கோட்டை மாவட்டம் & பதிவு மாவட்டம், புதுக்கோட்டை துணை பதிவு அலுவலகம், R.S.No.418/2 உள்ள நிலம் வீட்டுமனைகளாக S.S.L/Ews லேஅவுட் அனுமதி எண்.796/90 இன் ரெங்கம்மாள் சத்திரம் ஸ்கீம் என்ற திட்டத்தின்படி பிரிக்கப்பட்டுள்ளது. அதில் 450 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.28 **பின்வரும் நான்கெல்லைகளைக் கொண்டது. வடக்கு:** மனை எண்.29, **தெற்கு:** மனை எண்.27, **கிழக்கு:** 9 மீட்டர்கள் சாலை, **மேற்கு:** திட்ட எல்லை. இந்த நான்கெல்லைகளுக்குள் அளவீடு: வடக்கு: 15 அடி, கிழக்கு: 30 அடி, தெற்கு:15 அடி, மேற்கு: 30 அடி. மொத்தம் 450 ச.அடி சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதில் மின்வாரிய சேவை இணைப்பு மற்றும் அதன் வைப்புத் தொகை, நடைபாதை மற்றும் பயன்பாட்டு உரிமைகள் உடையது.	Rs. 1761375.00/- (ரூபாய் பதினேழு லட்சத்து அறுபத்து ஓராயிரத்து முந்நூற்று எழுபத்தைந்து மட்டும்)	Rs. 176137.50/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து நூற்று முப்பத்து ஏழு மற்றும் பைசா ஐம்பது மட்டும்)	02-06-2026 Before 5 PM	10,000/-	19-05-2026 (11AM – 4PM)	03-06-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், முன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுறு வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் டிரஸ்டீஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஜிஜிஇசிஇ பேங்க் லிமிடெட், பான்ஞ்சில் டெக்னிகல் பார்க், கணபதி செளக் அருகில், 43/44, விமான் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேதும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ **02.06.2026** தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயஎன்ற்ளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை அவற்றின் மூல பிரதியை முகவரி: **கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி–620 017(தநா), மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudararajan@grihumhousing.com.** தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தார்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் (மும்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 01.05.2026, இடம்: தமிழ்நாடு **ஒ/ம்- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**